# Commissioner Message

*Thiru. M. Gandhiraj., Municipal Commissioner*



உதகமண்டலம் நகராட்சியில் 36 வார்டுகள் உள்ளன. இந்நகராட்சியில் தடையற்ற குடிநீர் வசதி சீரான மின்சார தெருவிளக்கு வசதி அளிக்கப்படுகிறது. இந்நகராட்சியில் பையோ கேஸ் பிளான்ட் மூலம் காய் கனி கழிவிலிருந்து மின்சாரம் தயாரித்து தெருவிளக்குகள் எரிய வைக்கும் பணி விரைவில் தொடங்க உள்ளது. மேலும் இந்நகராட்சியில் அம்மா உணவகம் சிறப்பாக செயல்படுகிறது. மற்றும் ADB திட்டத்தின் மூலம் மின்சார சிக்கனத்திற்காக LED LIGHT கள் முக்கிய சாலைகளில் பொறுத்தப்பட உள்ளன. IUDM திட்டத்தின் மூலம் அனைத்து தெரு விளக்குகளும் LED LIGHT களாக மாற்றி அமைக்கும் பணி தொடங்கி உள்ளது. உதகை சுற்றுலா நகராக உள்ளது, இங்கு ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்த வண்ணம் உள்ள போதிலும் நகராட்சி சார்பில் அனைத்து அடிப்படை வசதிகலும் சீரான முறையில் செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. இந்நகரில் அடிப்படை கட்டமைப்புகளையும் அடிப்படை வசதிகளையும் பெருக்குதல் மற்றும் நகராட்சியின் வரியின வருமானத்தை உயர்த்துதல் ஆகியவற்றை குறிக்கோளாக கொண்டு அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் ஒத்துழைப்புடன் நகராட்சி சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கிறது.

# Chairman Message



உதகமண்டலம் நகராட்சியில் 36 வார்டுகளிலும் கோவிட் – 19 தடுப்பு ஊசிகள் போடப்பட்டது சிறப்பு மூகாம்கள் நடத்தப்பட்டு பூஸ்டர் ஊசிகளும் வார்டு வாரியாக போடப்பட்டு வருகிறது. மேலும் 36 வார்டுகளிலும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கிடவும் வழிவகை செய்யப்படுள்து. இருப்பினும் நகரின் மையப் பகுதிகளில் சுத்திகரிக்கப்பட்ட பாதுகாப்பான வாட்டர் ஏ.டி.எம் பொருத்தப்பட்டுள்ளது. மேலும் பிரம்ம குமாரிகள் நிறுவனத்தின் சார்பாக தூய்மைப் பணியாளர்களை மே1 தேதியன்று அவர்களை கொளரவித்து பொன்னாடை போர்த்தப்பட்டது. மேலும் இரவு நேரங்களில் சிப்ட்டு அடிப்படையிலும் தூய்மைப் பணியாளர்களை அமர்த்தி குப்பைகளை தரம் வாரியா பிரிக்கப்பட்டு வாங்கப்படுகிறது. மேலும் தடைசெய்யப்பட்ட பிளாடிக் பொருட்கள் மற்றும் மது பான பாட்டில்களை பொதுமக்களிடம்மிருந்து சேகரிக்கப்பட்டு வருகிறது.

**Covid - 19 Awareness Programme**
**Udhagamandalam Municipality**







நீலகிரி மாவட்டம் உதகையில் கொரோனா நோய் பூஸ்டர் தடுப்பூசி முகாம் இன்று துவங்கி வைத்தார் 22 வது வார்டு நகரமன்ற உறுப்பினர் மற்றும் நகராட்சி துணைத் தலைவர் திரு ரவிக்குமார் அவர்கள்.

3:02 pm ✓



நீலகிரி மாவட்டம் உதகை பிங்கர் போஸ்ட் பகுதியில் இன்று (30.04.2022) நடைபெற்ற் கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சா.ப. அம்ரித் இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டார். உடன் துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.பாலுசாமி, உதகை நகர்நல அலுவலர் மரு.ஸ்ரீதர், உதகை வட்டார மருத்துவ அலுவலர் மரு. முருகேசன் உட்பட பலர் உள்ளனர்.

3:22 pm ✓


வது அமுத திருவிழா
தந்திர திருநாள் அமுத
ஆன்மீக சக்திகளை வெளி
அகில உலக தொழிலாளர்
நகராட்சி
குமாரிகள்,


வது அமுத
திருநாள்
ஆன்மீக சக்திகளை வெளி
கருணை மற்றும்
உலக
குமாரிக

## உதகமண்டலம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்
## முன்னிலை திரு.எம். காந்திராஜ்.

ந.க.எண்: 3261/2021/எச்2 நாள்:29.04.2022

பொருள்: கோவிட் 19 - உதகமண்டலம் நகராட்சி – மாபெரும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் சிறப்பு முகாம் 26.03.2022 சனிக்கிழமை – முதல் தவணை தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்கள் இரண்டாவது தவணை தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்கள் மூன்றாம் தடுப்பூசி செலுத்த பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தல் – நகராட்சி அலுலலர்கள் மற்றும் பணியாளர்கள் குழு அமைத்து உத்தரவிடுதல்– தொடர்பாக.

பார்வை:
1. மாவட்ட ஆட்சித்தலைவர், நீலகிரி மாவட்டம் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரை நாள்:25.04.2022
2. ஆணையாளர் அவர்களின் அவர்களின் அறிவுரை நாள்:28.04.2022
3. நகரநல அலுவலர் (பொ) அவர்களின் அறிவுரை நாள்.28.04.2022.

*************************

உத்தரவு:

பார்வை 1ல் காணும் மாவட்ட ஆட்சித்தலைவர், நீலகிரி மாவட்டம் ஆய்வு கூட்டத்தில், பார்வை 2ல் ஆணையாளர் அவர்களின் அறிவுரையின் படியும், பார்வை 3 ல் நகரநல அலுவலர் (பொ) அவர்களின் அறிவுரையின் படியும் நீலகிரி மாவட்ட உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கையாக, முதல் தவணை தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்கள் இரண்டாவது தவணை தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்கள் மூன்றாம் பூஸ்டர் தடுப்பூசி செலுத்த செலுத்தாத நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தும் சிறப்பு முகாம் 30.04.2022 சனிக்கிழமை 30 மையங்களில் செலுத்தப்படுவதால், பட்டியலில் கண்டுள்ள பயனாளிகளை தொடர்பு கொண்டு, கீழ்கண்டுள்ள மையங்களில் தடுப்பூசி செலுத்திக்கொள்வதற்கான, மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு செய்யவும் இணைப்பில் கண்டுள்ளவாறு நகராட்சி அலுலலர்கள் மற்றும் பணியாளர்கள் கொண்ட குழு அமைத்து உத்தரவிடப்படுகிறது.

மேலும், தடுப்பூசி செலுத்தும் 30 மையங்களில் குடிநீர் வசதி, மின்வசதி, கழிப்பிட வசதி, சுகாதாரப்பணி மற்றும் பொது மக்கள் வசதியாக நிற்பதிற்கு ஏதுவாக அனைத்து முன் ஏற்பாடுகளையும் முகாம் நடைபெறும் நாளிற்கு முன்பாக சம்பந்தப்பட்ட பொறியாளர் பிரிவு மற்றும் பொதுசுகாதாரப் பிரிவு அலுவலர்கள் செய்து முடிக்கவும், மேற்படி சிறப்பு முகாம் நடைபெறும் நாளன்று இந்நகராட்சி அனைத்து பிரிவு உள்புற மற்றும் வெளிப்புறப் பணியாளர்கள், அலுவலர்கள் தவறாது அலுவலகம் வரவும் உத்தரவிடப்படுகிறது.

மேலும், இந்நகராட்சி பணியாளர்களின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்களில் தடுப்பூசி செலுத்தாதவர்கள் எவரும் இருப்பின் இச்சிறப்பு முகாமில் தடுப்பூசி செலுத்திக்கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறது.

ஆணையாளர்,
உதகமண்டலம் நகராட்சி.

29/4/2022

இணைப்பு: மேற்கூறியவாறு

பெறுநர் :

சம்பந்தப்பட்ட உதவிப்பொறியாளர், துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் இதர அலுலலர்கள் மற்றும் பணியாளர்கள்.

நகல் :

ஆணையாளர், மேலாளர், பொறியாளர், நகர்நல அலுவலர், கணக்கர், வருவாய் அலுவலர் ஆகியோரின் மேஜைக்கு

நகல் பணிந்தனுப்பப்படுகிறது :

1. மாவட்ட ஆட்சித் தலைவர், நீலகிரி
2. [illegible] திருப்பூர்

## உதகமண்டலம் நகராட்சி

| வ. எண் | பெயர்/பதவி | தொலைபேசி எண் | வார்டு எண் | தடுப்பூசி செலுத்தப்படும் மையம் | கண்காணிப்பு அலுவலர்கள் பெயர்/ பதவி/ திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.ஹரி கிருஷ்ணன் (பரப்புரையாளர்) | 6380952331 | 11 | Adayar Aanandha Bhavan | திரு.மகாராஜன் (துப்புரவு ஆய்வாளர்) |
| 2 | திரு.ஜெயமாலைநாதன் (துப்புரவு மேற்பார்வையாளர்) | 9787335284 | 22 | மேரிஸ் ஹில் (In and Out) | |
| 3 | திரு.மணிகண்டன் (தூய்மைப் பணியாளர்) | 8903624485 | 3 | புதுமந்து (ICDS) | |
| 4 | திரு.லூர்துசாமி (தனியார் துப்புரவு மேற்பார்வையாளர்) | 9655168878 | 18 | மத்திய பேருந்து நிலையம் | |
| 5 | | | 18 | UPHC | |
| 6 | திரு. மாதவன் (தனியார் துப்புரவு மேற்பார்வையாளர்) | 9626224691 | 14 | மெயின் மார்கெட் | |
| 7 | திரு.வடிவேல் (துப்புரவு மேற்பார்வையாளர்) | 9786773410 | 17 | ஹோபர்ட் பள்ளி | |
| 8 | திரு.மனோகரன்(துப்புரவு மேற்பார்வையாளர்) | 9843471331 | 11 | உழவர் சந்தை | |
| 9 | திரு.செல்வராஜ் (துப்புரவு மேற்பார்வையாளர்) | 9894163793 | 5 | கோடப்பமந்து பள்ளி | |
| 10 | திருமதி.விஜயா (துப்புரவு மேற்பார்வையாளர்) | 8098547979 | 22 | டேவிஸ் டேல் (ICDS) | திருமதி.வைரம் (துப்புரவு ஆய்வாளர்) |
| 11 | திரு.இளங்கோவன்(துப்புரவு மேற்பார்வையாளர்) | 9894114941 | 31 | ஜூட்ஸ் சர்ச் | |
| 12 | திரு.கோவிந்தராஜ் (துப்புரவு மேற்பார்வையாளர்) | 7812870386 | 25 | பென்னட் மார்கெட் | |
| 13 | | | 23 | காந்தல் | |
| 14 | திருமதி.காவியா(பரப்புரையாளர்) | 7010505324 | 26 | முக்கோணம் (ICDS) | |
| 15 | திரு.பிரித்திவிராஜ் (பரப்புரையாளர்) | 9047121675 | 1 | HPF Guest House | |
| 16 | திருமதி.அனுராதா (பரப்புரையாளர்) | 9025008437 | 2 | வி.சி.காலனி | |
| 17 | திரு.மோசஸ் (தனியார் துப்புரவு மேற்பார்வையாளர்) | 6380851527 | 28 | முள்ளிக்கொரை(ICDS) | |

| வ. எண் | பெயர்/பதவி | தொலைபேசி எண் | வார்டு எண் | தடுப்பூசி செலுத்தப்படும் மையம் | கண்காணிப்பு அலுவலர்கள் பெயர்/ பதவி/ திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 18 | திரு.இளங்கோவன்(துப்புரவு மேற்பார்வையாளர்) | 9894114941 | 2 | அண்ணா காலனி (ICDS) | திருமதி.வைரம் (துப்புரவு ஆய்வாளர்) |
| 19 | திரு.மூர்த்தி (தனியார் துப்புரவு மேற்பார்வையாளர்) | 9342909834 | 2 | குளிச்சோலை நீயூ எரா பள்ளி | |
| 20 | திரு.சரவணன் (துப்புரவு மேற்பார்வையாளர்) | 9003970326 | 27 | தீட்டுக்கல் பள்ளி | |
| 21 | திரு.திருநாவுக்கரசு (துப்புரவு மேற்பார்வையாளர்) | 9626131040 | 2 | பிங்கர் போஸ்ட் | |
| 22 | திரு.ரவி (தூய்மைப் பணியாளர்) | 8489308565 | 8 | கல் பங்களா | திரு.ரத்தினகுமார் (துப்புரவு ஆய்வாளர்) |
| 23 | திரு.ஜீவா (துப்புரவு மேற்பார்வையாளர்) | 9498360952 | 35 | தலையாட்டுமந்து பள்ளி | |
| 24 | திரு.பழனிசாமி (துப்புரவு மேற்பார்வையாளர்) | 9443856839 | 34 | நொண்டிமேடு (ICDS) | |
| 25 | திரு.வாசு (தனியார் தூய்மைப் பணியாளர்) | 8072015144 | 35 | லவ்டேல் (Ration shop) | |
| 26 | திரு.சைலேஷ் குமார் (பரப்புரையாளரின் மேற்பார்வையாளர்) | 8667220859 | 35 | Funcity | |
| 27 | படகு இல்லம் | Mobile Team | | | திரு.ஸ்ரீதர், நகர்நல அலுவலர் (பொ) |
| 28 | தாவரவியல் பூங்கா | | | | |
| 29 | கர்நாடகா பூங்கா | | | | |
| 30 | ரோஜா பூங்கா | | | | |

ஆணையாளர்,
உதகமண்டலம் நகராட்சி.

29/4/2002




தமிழ்நாடு அரசு
உதகமண்டலம் நகராட்சி
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை
கோவிட் - 19 சிறப்பு தடுப்பூசி முகாம்
COVID -19 SPECIAL VACCINATION CAMP
மாவட்ட ஆட்சியர்
ஆணையாளர்


தமிழ்நாடு அரசு
உதகமண்டலம் நகராட்சி
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை
கோவிட் - 19 சிறப்பு தடுப்பூசி முகாம
COVID -19 SPECIAL VACCINATION CAMP
மாவட்ட ஆட்சியர்
நீலகிரி மாவட்டம்
துணை இயக்குநர் சுகாதார பணிகள்
ஆணையாளர
உதகை நகராட்சி


ஒருங்கிணைந்தகுழந்தைகள் வளர்ச்சித்திட்டம்
POSHAN ABHIYAA





யந்திரம் / WATER A.T.M.
ருபாய்க்கு 200 மி.லி.
Rupee for 200 ml.
ருபாய்க்கு 400 மி.லி.
2 Rupee for 400 ml.
5 ருபாய்க்கு 1 லிட்டர்
5 Rupee for 1 litter
The Nilgiris
Starts today




C.K. FISH STALL
மதுபான பாட்டில்கள் & பிளாஸ்டிக்
கழிவுகள் சேகரிப்பு மையம்
LIQUOR BOTTLES & PLASTIC WASTE
COLLECTION KIOSK
மாவட்ட நிர்வாகம் - நீலகிரி மாவட்டம்


& பிளாஸ்டிக்
மையம்
WASTE


C.K. FISH STALL
மதுபான பாட்டில்கள் & பிளாஸ்டிக்
கழிவுகள் சேகரிப்பு மையம்
LIQUOR BOTTLES & PLASTIC WASTE
COLLECTION KIOSK
மாவட்ட நிர்வாகம் - நீலகிரி மாவட்டம்


TN43
J 4649




LUCKY


TEL
HOTEL
GARDEN


TN43

©
தமிழ்நாடு அரசு
2022

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 18.40 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 37] சென்னை, புதன்கிழமை, செப்டம்பர் 14, 2022
ஆவணி 29, சுபகிருது, திருவள்ளுவர் ஆண்டு–2053

## பகுதி IV—பிரிவு 2 இன் இணைப்பு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2022 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 17 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத்தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது: –

**சட்ட எண் 35/2022.**

**1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கும் நடைமுறைக்கு மீண்டும் கொண்டு வருவதற்குமானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் எழுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப்பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:– குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு, அறிவிக்கையின் மூலம் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 9/1999. 2. (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படுவதான), 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் (2) ஆம் பிரிவில்,– 2 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (6), (7), (11), (13) மற்றும் (33) கூறுகளில், “நகராட்சி” எனும் சொற்றொடர் காணப்படுகின்ற இடங்களில், “நகராட்சி மன்றம்” எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (9) கூறில், (a) உட்கூறிற்காக, பின்வரும் உட்கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

“(a) 2013 ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் (மையச்சட்டம் 18/2013), 2 ஆம் பிரிவின் (42) கூறின் பொருளின்படியான அயல்நாட்டு நிறுமம் உட்பட அந்தச் சட்டத்தில் பொருள்வரையறை செய்யப்பட்டவாறான நிறுமம் எதுவும் என்றோ;”;

விளக்கம்.— இந்த கூறின் நோக்கத்திற்காக, 'தொழிற்பேட்டை' என்பது அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் மேம்படுத்தப்பட்ட அல்லது அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள வேறு அதிகார அமைப்பு எதனாலும் மேம்படுத்தப்பட்ட எந்தவொரு பகுதி என்று பொருள்படும். இதில் தொழில் எதற்கும் அல்லது ஒரு வகை தொழில்துறைக்கு இடமளிக்கப்படுகிறது; மற்றும்

(c) இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் இந்தப் பிரிவின் கீழ் மதிப்பீடு செய்வதிலிருந்து விலக்கப்படுதல் வேண்டும்.

(3) அரசானது (2) ஆம் உட்பிரிவிற்கான வரம்புரையின் (a) கூறு அல்லது (b) கூறுக்கு பொருந்தக்கூடிய நேர்வெதிலும் அல்லது நேர்வின் வகைகளிலும் நிலத்தின் மதிப்பு, கட்டுமானத்திற்காக தற்போதைய செலவினம் மற்றும் தேய்மானத்திற்காக கழிக்கப்படும் தொகை ஆகியவற்றை மதிப்பிடும் அல்லது திருத்தியமைக்கும் அத்தகைய நபர் அல்லது நபர்கள் மற்றும் அத்தகைய கால இடைவேலைகள் மற்றும் முறைகள் தொடர்பாக விதிகளை உருவாக்குவதற்கான அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் மற்றும் அவர்கள் அத்தகைய விதிகள் அத்தகைய நேர்வு அல்லது நேர்வுகளின் வகைகளுக்கான வரம்புரைகளின் பயன்பாட்டினை கட்டுப்படுத்தலாம் அல்லது மாற்றியமைக்கலாம்.

(4) இந்தப் பிரிவின்படி கணக்கிடப்பட்ட சொத்து வரியானது ஒவ்வொரு அரையாண்டுக்கும் செலுத்தப்படுதல் வேண்டும் மற்றும் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரால் அரையாண்டு காலத்திற்குள் செலுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

விளக்கம்.— இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, "அரையாண்டு" என்ற சொற்றொடரானது, ஆண்டு ஒன்றில் ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் செப்டம்பர் 30 ஆம் தேதி வரையிலும், அக்டோபர் 1 ஆம் தேதி முதல் மார்ச் 31 ஆம் தேதி வரையிலும் இருத்தல் வேண்டும்.

(5) ஆணையாளர், கட்டடம் அல்லது நிலத்தின் அனைத்து விவரங்கள் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில் அத்தகைய கட்டடம் அல்லது நிலம் தொடர்பாகச் செலுத்த வேண்டிய சொத்து வரி ஆகியவற்றைக் கொண்ட சொத்து வரி புத்தகத்தை வழங்குதல் வேண்டும்.

(6) (a) மன்றமானது, விவசாய நோக்கங்களுக்காக தனியாக பயன்படுத்தப்படாத மற்றும் கட்டடங்களால் ஆக்கிரமிக்கப்படாத அல்லது அருகில் உள்ள மற்றும் இணைக்கப்படாத நிலங்களைப் பொறுத்த நேர்வில், அந்த நிலங்களுக்கு, அதன் அமைவிடம் மற்றும் சதுரடி ஒன்றுக்கு அரசால் வகுத்துரைக்கப்படலாகும் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச வீதத்திற்கு உட்பட்டதான அத்தகைய வீதத்தில் சொத்து வரி விதித்தல் வேண்டும்.

(b) நகராட்சி எல்லைக்குள் கட்டடத்துடன் கூடிய நிலம் ஏதேனும் இருப்பின் மற்றும் காலியாக உள்ள நிலத்தின் பரப்பளவு கட்டடத்தின் மொத்த பரப்பளவை விட இரு மடங்கு அதிகமாக இருப்பின், மன்றத்தினால் நிர்ணயிக்கப்பட்ட வீதத்தில் கட்டடத்தின் வெளிப்பரப்பளவு இருமடங்கு அதிகமாக இருக்கும் அந்த காலி நிலத்தின் மீது சொத்து வரியினை ஆணையாளர் நிர்ணயித்தல் வேண்டும்.

**84. சொத்து வரி செலுத்துவதற்கான ஊக்கத்தொகை மற்றும் தண்டத்தொகை.—** (1) அரையாண்டு தொடங்கிய நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் சொத்து வரி விதிப்புக்குரியவருக்கு வேண்டிய நிகர சொத்து வரியின் ஐந்து சதவீதத்தினை அதிகபட்சம் ஐந்தாயிரம் ரூபாய்க்கு உட்பட்டு, ஊக்கத்தொகையாக வழங்கப்படுதல் வேண்டும்.

(2) ஓர் அரையாண்டு முடிந்த பின்பு, சொத்து வரி ஏதேனும் செலுத்தப்படாமல் இருந்தால், வரி விதிப்புக்குரியவரால் வகுத்துரைக்கப்படலாகிறவாறான, மாதம் ஒன்றுக்கு தனி வட்டி முறையில் ஒரு சதவீதத்திற்கு மிகாத அத்தகைய வீதத்தில் வட்டியானது செலுத்தப்பட வேண்டிய தொகைக்கு கூடுதலாக, செலுத்தப்பட வேண்டும்.

(s) 2019 ஆம் ஆண்டு ஆவடி மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/2019);

(t) 2022 ஆம் ஆண்டு கடலூர் மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 1/2022);

(u) 2022 ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/2022);

(v) 2022 ஆம் ஆண்டு சிவகாசி மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 3/2022);

(w) 2022 ஆம் ஆண்டு கரூர் மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 4/2022);

(x) 2022 ஆம் ஆண்டு தாம்பரம் மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 5/2022);

(y) 2022 ஆம் ஆண்டு கும்பகோணம் மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 6/2022);

(z) 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் (செயல்பாட்டினை இடைநிறுத்தம் செய்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 33/2000);''.

(2) (3) ஆம் உட்பிரிவில், ''இந்தச் சட்டத்தின் தொடக்கம்'' எனும் சொற்றொடருக்காக அது காணப்படுகின்ற ஐந்து இடங்களில் ''2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டத்தின் தொடக்கம்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

102. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (செயல்பாட்டினை இடைநிறுத்தம் செய்தல்) சட்டத்தினால் (தமிழ்நாடு சட்டம் 33/2000) இடைநிறுத்தம் செய்யப்பட்ட, கூறப்பட்ட சட்டத்தின் செயல்பாடுகளின் அளாவுகைக்கு, முதன்மைச் சட்டம் முழுவதும், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்தும், அது முதற்கொண்டும் மீண்டும் புத்தாக்கம் பெறுதல் வேண்டும். முதன்மைச் சட்டத்தின் செயல்பாட்டின் புத்தாக்கம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. கோபி ரவிகுமார்**,
*அரசுச் செயலாளர் (சட்டமியற்றல்),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்**,
*உதவி இயக்குநர்,*
*சட்ட(தமிழ்ப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.